[2006 ஜனவரி 21

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 67, திரு. என். நன்மாறன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

67—

காற்றாலை மூலம் மின்சாரம்

***53609—திரு. என். நன்மாறன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிப்பட்டி கணவாய் பகுதியில் காற்றாலைமூலம் மின்சாரம் தயாரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. என். நன்மாறன் இருக்கையில் இல்லை.

வினா எண் 68, திருமதி தமிழ்மொழி ராஜதத்தன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

68—

ஊதிய உயர்வு

***28931—திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியில் பணிபுரியும் சமையல் உதவியாளர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் நடைமுறைப்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

2006 ஜனவரி 21]

(அ) மற்றும் (ஆ) நிதி ஆதாரம் இருக்கும்பொழுது பள்ளிக்கும், அரசு ஊழியர்களுக்கும் அள்ளிக் கொடுக்கக்கூடிய மனம் கொண்ட மனிதநேயமிக்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருடைய விடுதிகளில் சமையல் உதவியாளர்களுக்கு கடந்த 1–4–2005–லிருந்து ஊதியமாக ரூபாய் 500–லிருந்து 850 ரூபாய் என்று உயர்த்திக் கொடுத்துள்ளார்கள் என்ற நல்ல செய்தியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்.*

முற்பகல் 10–55

திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைத்து, மகளிர் வாழ்வில் நம்பிக்கை ஒளியேற்றி, மகளிர் மாநாடு கண்ட மாந்தருள் மாணிக்கம் மாண்புமிகு அம்மா அவர்களே, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதே சுனாமி வேகத்திலேயே அரசு இயந்திரத்தை முடுக்கிவிட்டு, மக்களைக் காத்த எங்கள் அன்னையே! வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 'நான் இருக்கிறேன் உங்களைக் காப்பாற்ற' என ஆறுதல் கூறிய, ஆறுதல் கரம் நீட்டிய அன்னையே! தங்களின் திறமையான நிருவாகத்தால், கஜானா காலி என்கின்ற சூழ்நிலையை மாற்றி, தமிழகத்தின் நிதிநிலைமையை ஆரோக்கியமான நிலைக்குக் கொண்டுவந்து, அடித்தட்டிலே இருக்கின்ற விவசாய மக்களினுடைய நலன் காக்க உழவர் பாதுகாப்புத் திட்டம் தந்த விவசாயிகளின் விடிவெள்ளியே! மாண்புமிகு அம்மா அவர்களே, தங்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகளில் பணிபுரிகின்ற சமையல் உதவியாளர்களுக்கு சம்பள உயர்வை ஏற்றித் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்திலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே என்னுடைய தொகுதிக்குட்பட்ட செவலபுரி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, புதியதாக மாணவர் விடுதி தொடங்குவதற்கு

அனுமதியளித்த தங்களுக்கு இந்த நேரத்திலே அன்பான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்திலே அந்தக் கிராமத்திலே இருக்கின்ற பள்ளி, முதலிலே உயர்நிலைப் பள்ளியாக இருந்தது; மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் தரம் உயர்த்தப்பட்டு, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டது. அதேநேரத்திலே அந்த தரம் உயர்த்தப்பட்ட பள்ளிக்கு, 46½ இலட்சம் ரூபாய் செலவில் புதியதாகக் கட்டடம் கட்டுவதற்கு நிதியொதுக்கீடு செய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்திலே இந்த விடுதியிலே பணியாற்றுகின்ற உதவியாளர்கள் மொத்தத்திலே நம்முடைய தமிழகத்திலே 463 உதவியாளர்கள் இருக்கின்றார்கள். இவர்களிலே 25 நபர்கள் என்னுடைய விழுப்புரம் மாவட்டத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். பொதுவாகவே இந்த விடுதியிலே பணியாற்றுகின்ற உதவியாளர்களும், சமையலர்களும் ஒரே சமமான வேலையைத்தான் அங்கே செய்து கொண்டிருக்கின்றார்கள். இருந்தாலும் இவர்கள் கடந்த ஏழு வருடங்களாகப் பணியாற்றிக் கொண்டு வருகின்றார்கள். இவர்களை நிரந்தரப் பணியில் அமர்த்தினால் இவர்களுக்கு மாத ஊதியமான அடிப்படைச் சம்பளம் 2,550 ரூபாய் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. இன்றைக்கு அரசு ஊழியர்களுக்கு எத்தனையோ திட்டங்களை அறிவித்திருக்கிற அம்மா அவர்களுடைய அரசு, இந்த 463 நபர்களுக்கும் விடிவெள்ளியாக இவர்களுடைய பணியை நிரந்தரம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1-4-2005-லிருந்து 500 ரூபாய் தொகுப்பூதியமாக இருந்ததை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாதம் 350 ரூபாய் ஊதியம் உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தை இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஏழுமலை.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்

2006 ஜனவரி 21]

மாணவர் விடுதியில் காலியாக உள்ள சமையலர், சமையலர் உதவியாளர் பணியிடங்களில் நபர்களை பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மனிதநேயமிக்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிரப்பப்படாத அனைத்துப் பணியிடங்களையும் நிரப்புவதற்கான உத்தரவை வழங்கிய அந்த அடிப்படையில், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்.

திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவினுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதேநேரத்திலே நம்முடைய தமிழகத்திலே மாணவர்கள் விடுதியானது, பிற்படுத்தப்பட்டோர் விடுதிகள் எத்தனை இருக்கின்றன? கடந்தகால தி.மு.க. ஆட்சியிலே எத்தனை விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்டிக்கொடுக்கப்பட்டன? மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே எத்தனை கட்டடங்கள் கட்டுவதற்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மொத்தம் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் விடுதிகள் 973 இருக்கின்றன. மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சி 2001-லே பொறுப்பேற்கின்றபோது தனியாருடைய கட்டடங்களில் விடுதிகள் அடிப்படை வசதியில்லாமல் இருப்பதை உணர்ந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நிதி ஆதாரங்கள் குறைவாக இருந்தாலும்கூட, வருங்காலச் சந்ததிகளாக விளங்கக்கூடிய பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மாணவ, மாணவிகளுடைய வாழ்வுக்கு நலம் அளிக்க வேண்டுமென்ற உன்னதமான நோக்கோடு, 760 விடுதிகள், தனியார் விடுதிகள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய திருக்கரத்தால் 294 விடுதிகள் கட்டித் திறக்கப்பட்டு, அனைத்து விடுதிகளுமே கட்டுவதற்கான உத்தரவு வழங்கப்பட்டு நடைமுறையில் இருக்கின்றது. ஆனால், கடந்த திராவிட

முன்னேற்றக் கழகத்தினுடைய ஐந்து ஆண்டுக்கால ஆட்சியில் வெறும் 36 விடுதிகள் மட்டும்தான் கட்டப்பட்டன என்பதையும் அதிலே பெண்கள்- (மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: அதிலே பள்ளி மாணவியர் விடுதிகளுக்கு 43 இலட்சம் ரூபாயும், மாணவர் விடுதிகளுக்கு 36.60 இலட்சம் ரூபாயும், கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு ரூ. 5,30,000/– செலவில் கட்டடங்கள் கட்டப்பட்டன. இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர், அந்த கடந்த ஆண்டிலேயிருந்த 36.60 இலட்சம் ரூபாயிலிருந்து 5,30,000 ரூபாய் வரை செலவு செய்து கட்டிய விடுதிகளின் வீண் செலவுகளைக் குறைத்து அத்தனை வசதிகளும் கொண்ட விடுதிக் கட்டடங்களை வெறும் 31½ இலட்சத்திற்கு மிகாமல் கட்டக்கூடிய உன்னதமான திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசு செய்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எஸ்.எம். பாலன்.

திரு. எஸ்.எம். பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லால்குடி தொகுதி, புள்ளம்பாடியில் நீண்டநாள் கோரிக்கையான பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி ஒன்று புதிதாக துவக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 69, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.